செய்தி அறிவிக்கை எண் : 06/ 2018
விளம்பர எண் : 492

## தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

## துறைத் தேர்வுகள் - மே 2018

### அறிவிக்கை

**2018-ஆம் ஆண்டு மே மாதம் நடைபெறவிருக்கும் துறைத்தேர்வுகளுக்கு விண்ணப்பதாரர்களிடமிருந்து இணையதளம் மூலமாக மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

| | |
|---|---|
| தேர்வின் பெயர் | :துறைத் தேர்வுகள் - மே - 2018 |
| அறிவிக்கை நாள் | : 01.03.2018 |
| முடிவு நேரம் மற்றும் நாள் | : 16.04.2018 & 5.45 பி.ப. |
| தேர்வு நடைபெறும் தேதிகள் | : 24.05.2018 முதல் 31.05.2018 வரை (சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை உட்பட) |
| தேர்வு கட்டணம் | :பதிவு கட்டணமாக ரூ.30/-ம் அஞ்சலக கட்டணம் ரூ.12/-ம் சேர்த்து விண்ணப்பிக்கும் தேர்வுக்கான கட்டணமும் செலுத்தப்பட வேண்டும். |

**பொதுவான விவரங்கள்:**

1. துறைத் தேர்வுகள் மே - 2018 திருத்தியமைக்கப்பட்ட பாடத்திட்டம் / தேர்வு அமைப்பு முறையில் அரசாணை எண்.33, ப.ம.நி.சீர்திருத்தத்துறை, நாள் 02.03.2017-ன்படி நடைபெறும்.

2. விண்ணப்பங்கள் தேர்வாணைய இணையதளம் www.tnpsc.gov.in மூலமாக மட்டுமே பதிவு செய்யப்பட வேண்டும்.

3. விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு தேர்விற்கும் ரூ.200/- தேர்வுக் கட்டணமாகவும் பதிவுக்கட்டணமாக ரூ30/-ம் அஞ்சலகக் கட்டணமாக ரூ.12/-ம் சேர்த்து அதற்கேற்ப அஞ்சலகப் பற்றுச் சீட்டு பெறப்பட வேண்டும். புது தில்லியைத் தேர்வு மையமாகத் தேர்ந்தெடுக்கும் விண்ணப்பதாரர்களுக்கு இது பொருந்தாது.

4. துறைத்தேர்விற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கான குறிப்பு மற்றும் விதிமுறைகள், திருத்தி அமைக்கப்பட்ட பாடத்திட்டம் / தேர்வு அமைப்பு முறை, தேர்வின் பெயர்/ தேர்வுக்குறியீடு/ தேர்வுகளுக்கான கட்டணம், அஞ்சலகங்களின் பட்டியல், துறைத்தேர்வுகள் - மே 2018-க்கான கால அட்டவணை, துறைத்தேர்வுகள் எழுதும் விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள் ஆகியவை முறையே பிற்சேர்க்கை I, II, III, IV, V மற்றும் VI எனும் கீழ்க்காணும் விவரங்களை தேர்வாணையத்தின் இணையதளம் www.tnpsc.gov.in -ல் காணலாம்.

இணைப்பு - I - துறைத்தேர்விற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கான குறிப்பு மற்றும் விதிமுறைகள்
இணைப்பு - II - திருத்தி அமைக்கப்பட்ட பாடத்திட்டம் / தேர்வு அமைப்பு முறை
இணைப்பு - III - தேர்வின் பெயர்/ தேர்வுக்குறியீடு/ தேர்வுகளுக்கான கட்டணம்
இணைப்பு - IV - அஞ்சலகங்களின் பட்டியல்
இணைப்பு - V - துறைத்தேர்வுகள் - மே 2018-க்கான கால அட்டவணை
இணைப்பு - VI - துறைத்தேர்வுகள் எழுதும் விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள்

5. தேர்வின் கால அட்டவணை:- முற்பகல் தேர்வு காலை 9.30 மணிக்கும் பிற்பகல் தேர்வு மதியம் 2.30 மணிக்கும் தொடங்கும்.

6. விண்ணப்பதாரர்கள் தங்களின் தனித்துவ விண்ணப்ப எண் மற்றும் பிறந்த தேதியை குறிப்பிட்டு தேர்வாணைய இணையதளத்தில் தங்களது நுழைவுச்சீட்டினை 18.05.2018 முதல் 31.05.2018 வரை பதிவிறக்கம் (Download) செய்துகொள்ளலாம்.

7. தேர்வுகளின் முடிவினைத் தேர்வாணையத்தின் இணையதளம் www.tnpsc.gov.in வாயிலாகவும் அறியலாம். தேர்ச்சி பெற்றவர்களின் பதிவெண்கள், பெயர், முகவரி ஆகியவை அடங்கிய முழுவிவரப்பட்டியல் 07.08.2018 மற்றும் 16.08.2018 ஆகிய நாளிட்ட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செய்தி வெளியீட்டில் வெளியிடப்படும். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செய்தி வெளியீட்டின் படிகளை உரிய தொகையினைச் செலுத்தி "எழுது பொருள் மற்றும் அச்சுத்துறை இயக்குநர், வெளியீட்டுக் கிடங்கு, அண்ணா சாலை, சென்னை-600 002" என்ற முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். மேலும், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் மாவட்ட மைய நூலகம் ஆகியவற்றில் பார்வைக்கு வைக்கப்படுகிறது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செய்தி வெளியீட்டின் படிகள் தேர்வாணைய அலுவலகத்திலிருந்து வழங்கப்படமாட்டாது.

தொலைபேசி : 044 – 25300300
நிகரி : 044 – 25300598

இணையதளம்: www.tnpsc.gov.in
மின்னஞ்சல் : coetnpsc.tn@nic.in
Toll Free No. : 1800 425 1002

தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்